[13th March 1958

SRI A. V. P. ASAITHAMBI : சாதிகளை ஒழிப்பது என்பது அவ்வளவு சுலபமானது அல்ல. அதைப்பற்றி நாம் எல்லோருமே சேர்ந்து ஆலோசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறியதை வரவேற்கிறேன். அதற்கு நாங்கள் எல்லாவகையிலும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம். ஆனால் கூடிய சீக்கிரத்திலேயே நாம் எல்லோரும் கூடி ஆலோசித்தால் அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டும் என்றாலும் அதற்குத்தக்க நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இதற்கான நடவடிக்கையை உடனடியாகச் சர்க்கார் மேற்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காகத்தான் மத்தியில் நான் எழுந்திருந்து பதில் சொன்னேன். எவ்வளவு சீக்கிரம் பண்ண முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பண்ணலாம்.

SRI K. RAMASUBBU : ஹோட்டல் பலகையில் சாதியின் பெயரைக் குறிப்பது சாதி மனப்பான்மையைக் காட்டுவதற்காக அல்ல. குறிப்பாக மலையாளி ஹோட்டல் என்றால் அங்கே அவியல் நன்றாக இருக்கும் எனத் தெரிந்து மக்கள் அங்கே போவதற்கு முடியும் என்கிற காரணத்தினால் அந்த அந்த சாதி தங்களுக்கு சமையலில் இருக்கக்கூடிய சாமர்த்தியத்தை விளம்பரப்படுத்திக் கொள்ளவே அவ்வாறு போடுகிறார்கள் என்பது இல்லையா என்று கேட்கவிரும்புகிறேன்?

MR. SPEAKER : The question is out of order.

SRI A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டலை நடத்துகிறவர்கள் முதலியார்களாக இருந்தாலும், நாடார்களாக இருந்தாலும் பிராமணர்களை வேலைக்குப் போட்டுக்கொண்டு பிராமணாள் ஹோட்டல் என்று பலகை போடுகிறார்களே, இப்படி உரிமை கொண்டாடுவதற்கு நியாயம் உண்டா ? அந்த ஹோட்டல் உரிமையாளர் பேரிலேயே பலகை போடவேண்டும் என்று வற்புறுத்த முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹோட்டல் சொந்தக்காரர்களே அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஸ்ரீ கோவிந்தசாமி இவ்வளவு அக்கறை ஏன் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரியவில்லை. இதிலிருந்து இவர்கள் போராட்டத்தின் கொள்கை தெரிந்துவிடுகிறது. ஒருகால் இதற்கு ஸ்ரீ ராமசுப்பு சொன்ன காரணம் உண்மையாக இருக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Wells for elementary schools

* 311 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount provided in 1955–56 and 1956–57 for schemes for the construction of wells for elementary schools; and

(*b*) the amount actually spent in those years?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No separate provision was made in the budget for payment of grant for sinking wells in elementary schools. Schemes for sinking of wells are included in the provision under buildings for elementary schools.

(*b*) 1955–56—Rs. 350.

1956–57—Rs. 950.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற அநேக ஆரம்பப் பள்ளிகூடத்து மாணவ மாணவிகள் குடி தண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அரசாங்கம் அதிகமான தொகையை ஒதுக்கி குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முன் வருவார்களா ?

13th March 1958]

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தப் பள்ளிகள் எல்லாம் கிராமங்களில் இருக்கின்றன. அந்த அந்த கிராமங்களில் குடிதண்ணீர் வசதி இருந்தால் இவர்களுக்கும் கஷ்டமில்லை. கிராமங்களுக்கு ஒதுங்கி பள்ளிக்கூடம் இருக்கக்கூடிய இடங்களில்தான் குடி தண்ணீர் பிரச்சனை எழுகிறது. அதற்காகத்தான் ரூ. 350 செலவு செய்து 1955–56-ல் ஒரு கிணறும் இவ்வாண்டில் இரு கிணறுகளும் வெட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that many of the wells that are found in the elementary schools are in a state of disrepair and if so, will they issue instructions to attend to the repair of these wells?

The Hon. Sri C. SUBRAMANIAM : Many things are in a state of disrepair. I think particularly the elementary schools need much more attention than what we are devoting now.

Sri S. LAZAR : ஆற்றோரங்களில் பல கிராமங்கள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மாணவ மாணவிகள் ஆற்றில் இறங்கி தண்ணீர் குடிக்கச் சென்று தங்கள் உயிரையே மாய்த்துக் கொண்டு விடுகிறார்கள். இதனால் பல உயிர்ச்சேதங்கள் உண்டாவதால் அதற்கு ஏதாவது மாற்று யோசனை, மாற்று உத்தரவு பிறப்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது குடிதண்ணீர் பிரச்சனை அல்ல.

Sri V. SUBBIAH : பேசிக் விவசாயப் பள்ளிக்கூடங்களிலாவது குடி தண்ணீர் காரணமாக கிணறுகள் வெட்டும் உத்தேசம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அது தனியாக பண்ணைகள் ஏற்படுத்தும்போது தனியாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

Sri N. MARUDACHALAM : ஆதாரப் பள்ளிக்கூடங்களில் ஐந்தாவது தேறியவர்கள் உயர்நிலைப்பள்ளிக்குப் போகும்போது தனிப் பரிட்சை வைக்கப்படுகிறது. இப்படிப் பரிட்சை வைக்காமல் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வார்களா ?

Mr. SPEAKER : இந்த உபகேள்விக்கும், மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

Sri V. K. KOTHANDARAMAN : கிராமங்களில் இருக்கக்கூடிய பள்ளிகளில் குடி தண்ணீர் கிணறுகளை வெட்டிக்கொடுக்கும்போது சர்க்கார் பணத்திலேயே வெட்டிக் அந்தக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படுமோ ? அல்லது அதற்கும் அந்த கிராமத்தில் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கவேண்டுமா என்று அறியவிரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில் கிணறுகளாக இருந்தபோதிலும், கட்டிடமாக இருந்தபோதிலும் எந்த அடிப்படையில் சர்க்கார் உதவியைக் கொடுப்பது என்பதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி உதவி கொடுக்கப்படுகிறது.

N.G.Os., Kanyakumari district

* 312 *Q.*—**Sri T. S. RAMASWAMY PILLAI** : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the enhancement in the dearness allowance sanctioned to non-gazetted officers during 1957 was given to the non-gazetted officers working in the Kanyakumari district?